2023 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதியிலுள்ள வலம்புரிவிளையில் மலைபோல் குவிந்திருக்கும் குப்பைகளை அகற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், குடிநீர் சம்பந்தப்பட்ட கேள்விதான் மூலக் கேள்விக்குத் தொடர்புடையது. நீங்கள், இன்னொரு நாள் கேளுங்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *சரி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன், மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

82—

வேளாண்மைக் கல்லூரி

***6893—திரு. நிவேதா எம். முருகன்:**

மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதியில் புதிய வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பூம்புகார் தொகுதியில் புதிய வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.*

TRUTH ALONE TRIUMPHS

[2023 மார்ச் 31

திரு. நிவேதா எம். முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மயிலாடுதுறை மாவட்டம், புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டம்; பல்வேறு வளர்ச்சிப் பணிகளை எதிர்நோக்கியுள்ள மாவட்டம். எனது தொகுதி, கடைமடை பகுதியாகும். நாடே போற்றும் வகையில் விவசாயத்திற்கென்று தனி Budget–ஐ நமது கழக அரசு அறிவித்திருக்கிறது. வேளாண்மை Budget–ல் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் விவசாயிகளின் மத்தியில் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. இன்றைக்கு இளைஞர்களின் மத்தியில் விவசாயம் குறித்து சரியான புரிதலும், ஆர்வமும் ஏற்பட்டுள்ளது.

முற்பகல் 10–10

இன்று உலகம் முழுவதும், வேளாண்மை, இளைஞர்களின் கையிலே உள்ளது. ஆகையால், வேளாண் கல்லூரி தொடங்கப்பட்டால், அடுத்த தலைமுறை விவசாயிகள் உருவாகுவார்கள். நமது மாநிலத்தில் அத்தகைய மாற்றத்தைக் கொண்டுவர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வேளாண் கல்லூரி அமைத்துத்தருவது குறித்து மீண்டும் பரிசீலிக்க முன்வர வேண்டுமென்று, தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கல்லூரி துவக்க வேண்டுமென்றால், 110 ஏக்கர் நிலம் வேண்டும். அதைப்போல, பூம்புகார் தொகுதிக்கு அருகில் 2021–2022 ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்வேளூரில் புதிய வேளாண் கல்லூரி துவக்கப்பட்டு, இரண்டாமாண்டு வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, தஞ்சை, நாகை, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் 3 வேளாண் கல்லூரிகள் இயங்குகின்றன. அங்கு கிட்டத்தட்ட 395 மாணவர்கள் கல்வி பயில்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால், அந்த 3 கல்லூரிகளில் தற்சமயம் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 356. அவற்றில் 39 இடங்கள்

2023 மார்ச் 31]

காலியாக இருக்கின்றன. இடம் சம்பந்தப்பட்ட பிரச்சினையினால் அவர்களுக்குத் தேவையான நிலம் கிடைக்கவில்லை. ஆதலால், புதிய கல்லூரி துவங்குவதற்கு வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.*

திரு. நிவேதா எம். முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது விவசாயத்தை மட்டுமே நம்பியுள்ள மாவட்டம். அது 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகையும், 7,20,000 வாக்காளர்களும் உள்ள மாவட்டமாக இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதேநேரத்தில், மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள் வேளாண்மையில் புதிய தொழில்நுட்பத்தை அறிந்துகொள்ள, பயிற்சி பெற ஏதுவாக, மயிலாடுதுறை மாவட்டத்தில் வேளாண்மை அறிவியல் நிலையம் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதி பூம்புகார். மயிலாடுதுறைக்கு அருகில் ஆடுதுறையில் தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. இருந்தாலும், அங்கு நிலம்தான் பிரச்சினையாக இருக்கின்றது ஒரு கல்லூரி துவக்க வேண்டுமென்றால், 110 ஏக்கர் நிலம் வேண்டும். அதைக் கண்டறிந்து கொடுத்தால், நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட, நெடிய நாட்களாக எனது தொகுதியில், கலைக் கல்லூரி வேண்டுமென்று கேட்டு வருகிறேன். கிடைக்கப்பெறவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நேற்றைய முன்தினம் சந்தித்து, வரும் நிதியாண்டிலே*

என்னுடைய தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைத்துத் தரவேண்டுமென்று வேண்டுகோள் வைத்தேன். அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உடன் இருந்தார். கண்டிப்பாக செய்து தருவார் என்கிற ஒரு positive ஆன தகவல்தான் எனக்குக் கிடைத்திருக்கிறது. பாலூர் பண்ணையில் இடம் இருக்கிறது. ஆகவே, நடப்பாண்டிலே, தளபதி அவர்கள் ஆட்சிக் காலத்தில், நீங்கள் அறிவிக்க வேண்டியது மட்டும்தான் பாக்கி. நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த எனது பாலூர் பண்ணையில் வேளாண்மைக் கல்லூரியை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) கேட்டு அமர்கிறேன் என்று கூறியதும் முடித்துவிட வேண்டும்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களை எப்போதும் திருப்திப்படுத்த முடியாது. ஏனென்றால் அவர்கள் கேட்டு, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது, அவர் தொகுதி என்று சொல்லி அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியை வழங்கினார். அந்தப் பகுதி தற்போது நெய்வேலி தொகுதியாக மாறிவிட்டது. அவருடைய தொகுதி மாறிய காரணத்தினால், அவருடைய தொகுதிக்கு தற்போது ஏதாவது செய்ய வேண்டுமென்றாலும், 110 ஏக்கர் நிலம் வேண்டும். அவர் குறிப்பிடும் இடத்திலும் இதே நிலப் பிரச்சினைதான். இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு உறுப்பினர் பண்ருட்டி தொகுதியில் கலைக் கல்லூரி வேண்டுமென்று கேட்டார். கலைக் கல்லூரி கொடுப்பதற்குக்கூட அங்கு இடம் கிடையாது. இடம் இருந்திருந்தால், கல்லூரி கொடுத்திருப்பார்கள். ஆனால், புதிய வேளாண் கல்லூரி துவங்குவதற்கு இப்போது நிலம்தான் பிரச்சினை. ஏனென்றால், மாணவர்கள் ஆராய்ச்சி செய்வதற்கு, படிப்பதற்கு, இடங்கள் தேவை, அவர்களுக்கு பயிற்சி–Training கொடுக்க வேண்டும். 110 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். பாலூரைப் பொறுத்தவரை, 50 ஏக்கர் நிலம்தான் இருக்கிறது. மீதி 60 ஏக்கர் நிலத்திற்கு எங்கே போவது என்றே தெரியவில்லை. பிற்காலத்தில் அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது நிதிநிலைமை பிரச்சினையாக இருக்கிற காரணத்தால், இதுகுறித்து

2023 மார்ச் 31]

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திற்கு வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயக் கல்லூரி தேவை என்று இன்றைய எதிர்க்கட்சித் தலைவர், அன்றைய முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களிடம் கோரிக்கை வைத்தவுடன், அதை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டார்கள். தற்போது, இரண்டு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிலம் தேவை என்று பதிலளித்தார்கள். எர்ரனஅள்ளி ஊராட்சியில் அரசு புறம்போக்கு நிலம் இருக்கிறது. அந்த இடத்தில் வேளாண்மை பட்டயக் கல்லூரியும், தோட்டக்கலைக் கல்லூரியும் அமைக்க முடியாது என்று சிக்கதோரணபெட்டத்திலுள்ள 92 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அது வேளாண் பல்கலைக்கழகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. அந்த நிலத்தைச் சீர் செய்வதற்காக ரூ.4,27,980/–ம் கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அரசாணை எண் 186. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது சரி! நிலம் இருக்கிறது; கல்லூரி தருவீர்களா என்று கேட்கிறீர்களா?*

திரு. கே.பி. அன்பழகன்: *கல்லூரி கேட்கிறேன். அங்கு 92 ஏக்கர் நிலமும் இருக்கிறது. அதற்கு அரசாணை எண் 186 வெளியிடப்பட்டது. அதேபோன்று, வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயக் கல்லூரிகள் ஆரம்பிப்பதற்கு வேளாண்மைத் துறையால் அரசாணை எண் 41–ம் வெளியிடப்பட்டுவிட்டது. ஆனால், இரண்டு ஆண்டுகளாகியும் அந்தக் கல்லூரி இன்னும் தொடங்கப்படவில்லை. ஆகவே, தருமபுரி மாவட்டத்தில்* Agriculture Diploma and Horticulture colleges *தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்*

முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற இடம், கல்லூரி அமைப்பதற்கு உகந்ததாக இல்லாமல், மலைப் பகுதியாக, மேடு, பள்ளமாக இருக்கிறது. வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கு இடம் மட்டும் போதாது. அந்த இடம் மாணவர்கள் பயிற்சி பெறுவதற்கு ஏதுவாக, பயிர் செய்வதற்கு உரிய விளைநிலமாக இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற நிலப்பகுதி சரியான பகுதியாக இல்லை. எனவே, வேறு பகுதியை நாங்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். பிற்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

83—

தொழிற்சாலை

***3149—திரு. கோ. ஐயப்பன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *கடலூர் தொகுதியில் தொழிற்சாலை தொடங்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையினை இப்பேரவைக்கு அளிக்க விரும்புகிறேன்.

(அ) *மற்றும்* (ஆ) *கடலூர் தொகுதியில் தொழிற்சாலை தொடங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில்*